## DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 408/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Petitioner | : | P.W.1 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஸ்ரீதர் பாபு | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 13.03.2026.

<u>எதிரி ஆஜரின்மைக்காக மனு அனுமதிக்கப்பட்டது</u>

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நீங்கள் போட்ட காசோலை மோசடி வழக்கில் அசல் பணத்திறகு வட்டி எவ்வளவு சதவீதம் என்றால் அது பற்றி பேசவில்லை. வட்டி பற்றி எதுவும் பேசப்படவில்லை என்றால் ஆமாம். இ தே போன்று எத்தனை பேருக்கு கடன் கொடுத்துள்ளிர்கள் என்றால் அப்படி எல்லாம் இல்லை. இதே போன்று உங்களால் எத்தனை காசோலை மோசடி வழகக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எதுவும் இல்லை. திருப்பூர் மற்றும் கோயம்புத்துார் மாவட்டத்தில் எந்த வழக்கும் இல்லை என்றால் ஆமாம். என்ன படித்துள்ளிர்கள் என்றால் எம் எ பி எல் படித்துள்ளேன். வழக்கறிஞராகவும் பயிற்சி எடுத்துவருகிறிர்கள் என்றால் ஆமாம்.
   வழக்கறிஞராக பயிற்சி எடுக்கும் போது கடன் கொடுப்பது தவறா என்றால் நான் கடன் கொடுக்கவில்லை. நான் கடனுக்கு கொடுக்கவில்லை என்றால் ஆமாம்.

2. எதிரியை எப்படி தெரியும் என்ற விவரத்தை உங்களது அறிவிப்பிலோ அல்லது புகார் மனுவிலோ சொல்லி உள்ளீர்களா என்றால் 1995–1997 வருடம் வரை எதிரி என்னுடன் 11 மற்றும் 12 ம் வகுப்பு உடன் படித்தவர். இந்த விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ புகாரிலோ சொல்லவில்லை என்றால் ஆமாம். உங்களுக்கும் எதிரிக்கும் உள்ள இந்த வரவு செலவிற்கு முன்னால் வங்கி கணக்கு பரிவர்த்தனை பற்றி வழக்கறிஞர் அறிவிப்பிலோ புகாரிலோ சொல்லியுள்ளிர்களா என்றால் சொல்லவில்லை. இந்த வழக்கு வரவு செலவுகள் குறித்து வழக்கறிஞர் அறிவிப்பிலோ புகாரிலோ சொல்லி உள்ளீர்களா என்றால் எனக்கு வரவேண்டிய மீத தொகை குறித்து சொல்லி உள்ளேன் சொல்லியுள்ளேன். பிரின்சிபல் தொகையை வாங்கிய தொகை பின்னிட்டு வட்டி தொகை கட்டி உள்ளாரா என்றால் அசல் தொகை தொகையில்லை. அசல் தொகைக்கு வட்டி செலுத்தியுள்ளாரா என்றால் இல்லை. எதிரி உங்களுக்கு தர வேண்டிய வட்டியாக உங்களது G pay ல் மூலம் ரூபாய் 30000/– செலுத்தியுள்ளார் என்றால் இல்லை. எனக்கு செலுத்த வேண்டிய மூன்று லட்சத்திற்கு இரண்டு முறை 15 ஆயிரம் 15 ஆயிரமாக என செலுத்தியுள்ளார். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள உள்ளது தான் என்றால் ஆமாம். **மேற்படி G pay ஆவணம் எமசா ஆ.1 என்று குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி எதிரி நீங்கள் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சொன்ன தொகைக்கு காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றால் தவறு.
3. நீங்கள் வழக்கறிஞராக பணியாற்றிக் கொண்டு கடன் கொடுப்பது சட்டப்படி தவறு என்றால் நான் கடன் கொடுக்கவில்லை, நான் வட்டிக்காக கொடுக்கவில்லை.
4. எதிரி அவரது நண்பருக்காக உங்களிடம் கடன் வாங்கியதற்காக செக்யூரிட்டிக்காக கொடுக்கப்பட்ட காசோலை என்றால் தவறு. அந்த கடன்களை அடைத்த பிறகும் தொலைபேசியில் நேரடியாகவும் காசோலையை திருப்பித் தர கேட்டும் நீங்கள் திருப்பித் தராமல் இந்த நீதிமன்றத்தில் தவறுதலாக வழக்கு போட்டு உள்ளீர்கள் என்றால் தவறு. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சம்பந்தம் உண்டு. பிரின்சிபல் தொகையில் 30 ஆயிரம் தொகை கொடுத்ததாக சொல்லி உள்ள நிலையில் அது உண்மையானால் ரூ. 2,70,000/– க்கு தான் நீங்கள் காசோலை வழக்கு போட்டிருக்க வேண்டும் என்றால் காசோலை வழக்கு போட்டதற்கு பின்பு போன வருடம் இந்த தொகை செலுத்தியுள்ளார்.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala. B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.